# இடைக்கால வரவு–செலவுத் திட்டம் 2021–22

## சிறப்பம்சங்கள்

**‘கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**

**அருவினையும் மாண்டது அமைச்சு’**

**(குறள் 631)**

❖ மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளுடன், மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் திறமையான தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் இந்த அரசு, அதன் ஆட்சிக் காலத்தை முழுமையாக நிறைவு செய்தது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை நாட்டிலேயே தலைசிறந்த மாநிலமாக்க வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையிலான இந்த அரசு, இந்திய அளவிலும், உலக அளவிலும் பல விருதுகளையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இந்திய அரசால் 2019 ஆம் ஆண்டு முதன் முறையாக கணக்கிடப்பட்ட நல் ஆளுமைத்திறன் குறியீட்டுப் பட்டியலில் நாம் முதலிடத்தைப் பெற்றுள்ளோம். கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ‘இந்தியா டுடே’ பத்திரிகை நடத்திய ‘மாநிலங்களின் நிலை’ என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில், ‘ஒட்டு மொத்த செயல்திறன் மிக்க மாநிலம்’ என்று தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் மீட்டெடுப்பு**

❖ கோவிட்–19 பெருந்தொற்று நோயால் நம் மாநிலத்தில் ஏற்பட்ட முன் நிகழ்வற்ற சவால்கள் மற்றும் மிகப்பெரிய தாக்கத்தின் விளைவுகள் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் காணப்படுகின்றன.

❖ கோவிட்–19 தொற்றுநோயை கையாளுவதில் தமிழ்நாடு ஒரு சிறந்த முன்னோடி மாநிலமாக பாராட்டப்படுகிறது.

- மாண்புமிகு பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் 100 சதவீத ஆர்.டி–பி.சி.ஆர் அடிப்படையிலான பரிசோதனை முறையையும், இணைய அடிப்படையிலான மருத்துவ சேவையான இ–சஞ்சீவனியை பயன்படுத்துவதிலும் முன்மாதிரிகளாக ஏனைய மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

- கோவிட்–19 பெருந்தொற்று மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக, அரசு 13,352.85 கோடி ரூபாய் செலவினங்களை மேற்கொண்டுள்ளது

- எதிர்பார்த்த வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும், நீண்டகால நிதி இழப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை வழங்குவதற்காக, பொருளாதார வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டாக்டர் சி. ரங்கராஜன் தலைமையில் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்தது.

- மாநில நிதி நிலை தொடர்பான துறை சார்ந்த 413 பரிந்துரைகளையும் குறிப்புகளையும் இக்குழு வழங்கியது. தமிழ்நாடு அரசு, குழுவின் பரிந்துரைகள் மற்றும் குறிப்புகளை முனைப்புடன் செயல்படுத்தத் தொடங்கி, இதுவரையில் 273 பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டில், குறைந்தபட்சம் 10,000 கோடி ரூபாய் கூடுதல் மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற டாக்டர் சி. ரங்கராஜன் குழுவின் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் மீது இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்த ஒதுக்கீட்டிற்கு மேல் நீர்ப்பாசனம், கட்டடங்களின் கட்டுமானம், சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள், வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் போன்ற மூலதனப் பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக 20,013 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

- 2020–21 ஆம் ஆண்டில் தமிழ்நாடு, 2011–12 ஆம் ஆண்டின் நிலையான விலை விகிதத்தில் 2.02 சதவீதம் நேர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2020–21 ஆம் ஆண்டின் அகில இந்திய பொருளாதார வீழ்ச்சி விகிதமான 7.7 சதவீதத்திற்கு மாறாக உள்ளது. கால்நடைத் துறை மற்றும் மீன்வளத் துறையில் வலுவான வளர்ச்சி உட்பட முதன்மைத் துறை 5.23 சதவீதம் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது

**15வது நிதிக்குழு மற்றும் மத்திய – மாநில நிதி உறவுகள்**

- இறுதி அறிக்கையில், 2021–22 ஆம் ஆண்டில், வருவாய் பற்றாக்குறை மானியத்தைக் குறைத்து 2,204 கோடி ரூபாய் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்தொகை, முதலாவது ஆண்டிற்கு மட்டும்தான் (2021–22) வழங்கப்படும்.

- தமிழ்நாட்டிற்குப் பரிந்துரைக்கப்பட்ட மொத்த உள்ளாட்சி அமைப்பு மானியத் தொகை, 2020–21 ஆம் ஆண்டில் 5,344 கோடி ரூபாயிலிருந்து 2021–22 ஆம் ஆண்டில் 3,979 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- 14வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட தொகையை விட, தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த மானியத் தொகை 15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளில் கணிசமாகக் குறைந்துள்ளது. அதாவது, 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 8,232.31 கோடி ரூபாயிலிருந்து, 2021 முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 7,187 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளன.

- 15வது நிதிக்குழுவால், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஒட்டுமொத்த மானியத் தொகையில், நிபந்தனையில்லாத மானியத்தின் பங்கு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 90 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முந்தைய நிதிக்குழுவால் 80 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

❖ 15வது நிதிக்குழு மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியங்களையும், துறைகளுக்கு குறிப்பிட்ட மானியங்களையும் பரிந்துரைத்துள்ளது. நீதித்துறை மற்றும் புள்ளியியல் துறை உட்பட ஆளுகை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள், சுகாதாரம், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, வேளாண்மை மற்றும் ஊரக உட்கட்டமைப்பு, உள்ளிட்ட சில குறிப்பிட்ட துறைகளுக்காக தமிழ்நாட்டிற்கு 4,784 கோடி ரூபாய் செயல்திறன் ஊக்கத்தொகையையும், மானியங்களையும் பரிந்துரைத்துள்ளது.

❖ ஐந்து திட்டங்களுக்கு மாநிலத்திற்கு குறிப்பிட்ட மானியமாக, தமிழ்நாட்டிற்கு 2,200 கோடி ரூபாயை குழு பரிந்துரைத்துள்ளது.

❖ 15வது நிதிக்குழு அதன் அறிக்கையில் மத்திய அரசின் மொத்த வரி வருவாயில், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கானது, 2011–12 ஆம் ஆண்டில் 10.4 சதவீதத்திலிருந்து, 2019–20 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 20.2 சதவீதமாக அதிகரித்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில், பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வையில் மத்திய அரசு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கை கணிசமாக உயர்த்தி, அடிப்படை தீர்வையின் பங்கைக் குறைத்துள்ளது.

❖ 2021–22 ஆம் ஆண்டின் மத்திய வரவு–செலவுத் திட்ட அறிக்கையில், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான அடிப்படை ஆயத்தீர்வையை மேலும் குறைத்து, விவசாய உட்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரி விதிக்கப்பட்டது.

❖ 2013–14 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தனிநபர் வருமான வரி மீதான கூடுதல் கட்டணம் மேலும் விரிவாக்கப்பட்டு, அதிகரித்ததன் மூலம் மத்திய அரசிற்கு பெருமளவிலான வருவாயை அளித்து வருகிறது. ஆனால், இந்த அதிகரிக்கப்பட்ட வருவாயில் இருந்து, மாநிலங்களுக்கு எந்தவிதமான பங்கும் கிடைப்பதில்லை. 2021–22 ஆம் ஆண்டின் மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் தங்கம், வெள்ளி, மதுபானங்கள், கச்சா சமையல் எண்ணெய், நிலக்கரி, பழுப்பு நிலக்கரி மற்றும் முற்றா நிலக்கரி (Lignite and

Peat), ஆப்பிள்கள், பருப்பு வகைகள் மற்றும் தரமான உரங்கள் உட்பட பல்வேறு பொருட்கள் மீதான அடிப்படை சுங்க வரி குறைக்கப்பட்டு, அதற்கு மாற்றாக வேளாண்மை உட்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரி விதிக்கப்பட்டுள்ளது.

❖ அனைத்து மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரி விகிதத்துடன் இணைக்கவும், மாநிலங்கள் தங்களது உரிய வருவாயின் பங்கினைப் பெறுவதை உறுதிசெய்யவும் மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**தமிழ் வளர்ச்சி**

❖ ஹார்வர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தைப் போன்றே, கனடாவிலுள்ள டொரண்டோ பல்கலைக் கழகத்திலும் தமிழ் இருக்கை அமைத்திட உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**வருவாய் நிர்வாகம்**

❖ நம் மாநிலத்திலுள்ள மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும், எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குவதற்காக 8 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது, இத்திட்டங்களின் கீழ் 33.60 இலட்சம் பயனாளிகள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இத்திட்டங்களுக்காக, 2010–11 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,083.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 4,316.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் இன்று வரையில் 25,32,732 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ 'புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை' இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் யுனைட்டெட் இந்தியா காப்பீட்டு

நிறுவனங்களுடன் இணைந்து, மாநில அரசு துவக்கி வைத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்திற்கான முழு நிதியையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும். தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 55.67 இலட்சம் தகுதியான குடும்பங்களுக்கு, குடும்பத் தலைவரின் இயற்கை மரணத்திற்கு 2 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். மேலும், குடும்பத் தலைவரின் விபத்து மரணத்திற்கு 4 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையும், நிரந்தர இயலாமைக்கு 2 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையும் வழங்கப்படும்.

**பேரிடர் மேலாண்மை**

❖ மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து கோவிட்–19 நிவாரண நடவடிக்கைகளுக்காக கணிசமான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020–21 ஆம் ஆண்டின் மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து இதுவரை மொத்தம் 11,943.85 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

❖ மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அதிக அளவிலான செலவினங்கள், 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டுகளுக்காக, மாநிலப் பேரிடர் நிவாரண மற்றும் மேலாண்மை நிதிக்கு, மத்திய அரசின் பங்கு 1,020 கோடி ரூபாயுடன், தமிழ்நாட்டிற்காக 15வது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தொகையான 1,360 கோடி ரூபாய் உண்மையில் போதுமான அளவில் இல்லை .

**காவல்துறை**

❖ 2011–12 ஆம் ஆண்டில் காவல்துறைக்கான வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், 3,513.15 கோடி ரூபாயிலிருந்து 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9,567.93 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

**சாலைப் பாதுகாப்பு**

❖ தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பிற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்ததனால், 2016 ஆம் ஆண்டில் 17,218 ஆக இருந்த உயிரிழப்பிற்குக் காரணமான விபத்துகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 8,060 ஆகக் குறைந்துள்ளது.

**நீதித்துறை நிருவாகம்**

❖ 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் இந்திய நீதி அறிக்கைகளில் நீதித்துறை என்ற பிரிவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

❖ 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டுவதற்காக 289.78 கோடி ரூபாய் உட்பட நீதி நிர்வாகத்திற்காக 1,437.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

❖ மாநிலம் முழுவதும் உள்ள 15.25 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு, மொத்தம் 1,715 கோடி ரூபாய் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு மேலும் நிவாரணம் அளிக்கும் விதமாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய அனைத்து பயிர்க் கடன்களையும் தள்ளுபடி செய்வதாக அறிவித்தார். இதனால், 16,43,347 விவசாயிகள் செலுத்த வேண்டிய மொத்தம் 12,110.74 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

❖ பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு காப்பீட்டுக் கட்டண மானியத்தை கூடுதல் சுமையாக ஏற்றுக்கொண்டு, 80:20 எனும் பகிர்மான அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய இணைக் காப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு போதுமான இடர்க் காப்பீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடான 747.15 கோடி ரூபாயை உயர்த்தி, 2020–21 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீடுகளில் 812.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை மேலும் உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,738.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2011–12 ஆம் ஆண்டிலிருந்து, நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், 4,060.12 கோடி ரூபாய் மொத்தச் செலவில், 19.26 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

- விவசாயத் தலைவர்களின் சேவைகளை கௌரவப்படுத்தும் வகையில் ‘நெல் உற்பத்திக்கான திரு. சி.நாராயணசாமி நாயுடு விருது’ திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் உற்பத்தியில் சாதனை படைத்தவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

- ‘பாரம்பரிய நெல் இரகங்களுக்கான நெல் ஜெயராமன் மையம்’, 47.87 இலட்சம் ரூபாய் செலவில் நீடாமங்கலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

**பொது விநியோகத் திட்டம்**

- கோவிட்–19 மற்றும் அடுத்தடுத்து தாக்கிய புயல்கள் மற்றும் பருவம் தவறிப் பெய்த கனமழை ஆகிய பாதிப்புகளிலிருந்து மாநிலம் மீண்டு வருவதால், இவ்வாண்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும், பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 2,500 ரூபாய் ரொக்க உதவி, மொத்தம் 5,604.84 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டது.

- 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ஒட்டுமொத்த உணவு மானியம் 6,500 கோடி ரூபாயிலிருந்து 9,604.27 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்**

- 2020–21 ஆம் ஆண்டில், தேனி, தலைவாசல் மற்றும் உடுமலைப்பேட்டையில் மூன்று புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன

- சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசலில், 1,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,102 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

- ஆவின் நிறுவனம் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 36.79 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து வருகிறது. ஆவின் வரலாற்றிலேயே, 2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் தேதியன்று, அதிகபட்சமான அளவாக, நாளொன்றுக்கு 40.63 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம்**

- மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கும் தளங்கள் மற்றும் கடற்கரை பாதுகாப்பு பணிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு கணிசமான அளவில் மேம்படுத்தப்பட்டது. 2011–12 ஆம் ஆண்டு முதல் இத்தகைய மூலதன பணிகளுக்காக, மொத்தம் 1,731.82 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 43 புதிய மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கும் தளங்கள் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக, 1,374.64 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரங்கள்**

- ஜல் சக்தி அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய நீர் விருதுகளில், தமிழ்நாடு முதலிடத்தை வென்றுள்ளது.

- 2,639 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியுதவி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 3,384 கோடி ரூபாய் செலவில் காவேரி உப வடிநிலத்தில் நீட்டித்தல், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல்

பணிகள், நபார்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் (NIDA) நிதியுதவியுடன் செயல்படுத்துவதற்கு, நபார்டு வங்கி அனுமதித்துள்ளது. இத்திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார். 933 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன், கீழ் பவானி பாசனப் பகுதிகளில் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

❖ 1,652 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 24,468 ஏக்கர் பரப்பளவு ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும் வகையில், அத்திக்கடவு–அவிநாசி வெள்ளக் கால்வாய் திட்டம் 2021 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 565 கோடி ரூபாய் செலவில் மேட்டூர் அணையிலிருந்து வெள்ள உபரி நீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு கொண்டு செல்லும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பணிகள் விரைவில் முடிவடையும்.

❖ தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கான பணிகள், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வறட்சி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் உள்ள, 56,909 ஏக்கர் பரப்பளவில் நிலங்கள் பயனடையும். காவேரி–தெற்கு வெள்ளாறு நதிகள் இணைப்பிற்காக, 6,941 கோடி ரூபாய் மதிப்பில் கொள்கை அளவிலான ஒப்புதலை அரசு அளித்துள்ளது. முதல் கட்டப் பணியாக, கரூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 331 கோடி ரூபாய் செலவில் வெள்ள நீர் செல்லும் கால்வாய்களை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 21 ஆம் நாளன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்.

❖ பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசனம் குறித்த பணிகளுக்கான மூலதன நிதி ஒதுக்கீடு, 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்

4,882.45 கோடி ரூபாயிலிருந்து, 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 6,389.22 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,453.17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் வனம்**

❖ 2019 ஆம் ஆண்டின் இந்திய வனநிலை அறிக்கையின்படி 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையே, தமிழ்நாட்டில் 15,900 ஹெக்டேர் அளவில் மரங்களின் பரப்பளவு அதிகரித்துள்ளது. மரங்களின் பல்லுயிர்த் தன்மையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

❖ தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான சதுப்பு நிலங்களில் ஒன்றாகவும், வெள்ளம் ஏற்படுவதைத் தடுத்து, நிலத்தடி நீர் வளத்தை மீள்நிரப்புவதிலும் மிக முக்கியமான பங்கு வகிக்கும் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை காப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது.

❖ பள்ளிக்கரணை சதுப்புநிலப் பகுதிக்கு நீரைக் கொண்டு செல்லும் நீர்வழிகளை தூய்மைப்படுத்தவும், சதுப்பு நிலத்தின் நீர் உறிஞ்சும் தன்மையை மீட்டமைக்கவும், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைந்து செயல்படுத்தும் திட்டம் 816.80 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு**

❖ 15வது நிதிக்குழு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியமாக, 2020–21 ஆம் ஆண்டில் 1,737 கோடி ரூபாயும், 2021–22 ஆம் ஆண்டில் 1,313 கோடி ரூபாயும் பரிந்துரைத்துள்ளது. இத்தொகை, 14வது நிதிக்குழுவின் இறுதி ஆண்டிற்காக, அதாவது 2019–20 ஆம் ஆண்டிற்கான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட 2,519.02 கோடி ரூபாய் மானியத்தை விட, கணிசமான அளவில் குறைவாக உள்ளது

❖ 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்விற்காக 5,141.60 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்விற்காக 6,754.30 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

❖ 2020–21 ஆம் ஆண்டில், 3,016.26 கோடி ரூபாய் செலவில் 40 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். இதில் 2,006.08 கோடி ரூபாய் ஜல் ஜீவன் மிஷன் வாயிலாகவும் 1,010.18 கோடி ரூபாய் பிற திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்தும் வழங்கப்படும்.

❖ தமிழ்நாடு, திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை ஏற்கெனவே அடைந்துள்ளது. தூய்மை இந்தியா திட்டம் (ஊரகம்) இரண்டாம் கட்டத்தில், இந்த நிலையைத் தக்கவைத்து, எந்த ஒரு வீடும் விடுபடாமல் பயன்பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்

❖ 2011–12 ஆம் ஆண்டு முதல், 98,894 கிலோமீட்டர் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டிற்காக 23,349 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ வீடு ஒன்றிற்கு 1.20 இலட்சம் ரூபாய் என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகை போதுமானதாக இல்லாததால், தற்போது தமிழ்நாடு அரசு அளித்து வரும் மேற்கூரை மானியமான 50,000 ரூபாயுடன், வீடு ஒன்றிற்கு, கூடுதலாக 70,000 ரூபாய் அனுமதித்துள்ளது. இதன் மூலம் வீடு ஒன்றிற்கான தொகை 2.75 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் செலவினமான 35,000 ரூபாய் உள்ளடங்கும்

- 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்திற்காக (ஊரகம்) மொத்த தொகையாக 3,548 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- 2021–22 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித் துறைக்காக 22,218.58 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**நகராட்சி நிருவாகம்**

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் திறந்தவெளியில் மலம் கழித்தலற்றவையாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2015ஆம் ஆண்டிலிருந்து, மொத்தம் 3,831 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (கூசூளுருனுஞு), உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**வாழ்வாதாரத் திட்டங்கள்**

- 2020–21 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 14,000 கோடி ரூபாயை விட, அதிகமாக வங்கிக் கடன் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது
- உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தின் மூலம், 2020–21 ஆம் ஆண்டில், 300 கோடி ரூபாய் மதிப்பிலான கோவிட் நிதியுதவித் தொகுப்பு வழங்கப்பட்டது. இதுவரை, 2,53,457 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை அரசு வகுத்து வருகிறது. மேலும் விரிவான வழிகாட்டுதல்கள், சம்பந்தப்பட்டவர்களுடனான கலந்துரையாடல்கள் மூலம் இறுதி செய்யப்படும்.

**நகராட்சி நிருவாகம்**

- 2020–21ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கான ஒதுக்கீடு 1,850 கோடி ரூபாயாகவும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சீர்மிகு நகரங்கள் திட்ட இயக்கத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் திறந்தவெளியில் மலம் கழித்தலற்றவையாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

- 2015ஆம் ஆண்டிலிருந்து, மொத்தம் 3,831 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது

- இத்திட்டத்தில் ஏற்பட்ட 32 மில்லியன் அமெரிக்க டாலர் சேமிப்பில், சென்னையின் முக்கிய பகுதிகளில் விடுபட்டுப்போன மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் அமைத்த காரணத்தால் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்துதல் உட்பட 2 துணைத் திட்டங்களை கூடுதலாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- முக்கியமான தொழில் வழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 3 கட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 502 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற முதன்மை முதலீட்டுத் திட்டம் (TNUFIP) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் கொசஸ்தலையாறு வடிநிலத்தில் ஒருங்கிணைந்த வெள்ளநீர் வடிகால் வலையமைப்புத் திட்டம் நடப்பாண்டில் 3,220 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு**

- 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில், பல்வேறு திட்டங்களின் கீழ், 12,248 கோடி ரூபாய் மதிப்பில் 1.09 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 2.27 இலட்சம் தனி வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது கட்டப்பட்டு வரும் 1.25 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளும், விரைவில் கட்டி முடிக்கப்படும்.

- 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்திற்கு (நகர்ப்புறம்) 3,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டில், வீட்டுவசதித் துறைக்கு நிதியுதவியாக உலக வங்கியிடமிருந்து 1,492.40 கோடி ரூபாய் பெற்றுள்ளோம். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

- அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புற ஏழை மக்களுக்கான, நிலைக்கத்தக்க வீட்டுவசதித் திட்டத்தின் முதல் கட்டத்திற்கான நிதியுதவி, ஆசிய வளர்ச்சி வங்கியின் அனுமதி பெறும் நிலையில் உள்ளது.

**சென்னை மாநகரக் கூட்டாண்மை**

- உலக வங்கியுடன் விரிவான கலந்துரையாடலுக்குப் பின், சென்னை மாநகரக் கூட்டாண்மை ஒரு தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்திற்கான ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும், உலக வங்கியுடன் கடன் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும்.

- இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஏழாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டம் 3,140 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும். இதில், உலக வங்கியின் நிதியுதவியாக 300 மில்லியன் அமெரிக்க டாலர் அடங்கும்.

**நெடுஞ்சாலைகள் துறை**

- 2020–21 ஆம் ஆண்டில் 3,167.28 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளுக்கும், 3,220.60 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளின் ஓடுதளப்பாதை தரத்தினை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கும், 706 பாலங்கள் மற்றும் சிறுபாலங்களுக்கான கட்டுமானப் பணிகளுக்கும் 5,300 கோடி ரூபாய் செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 6,023.11 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டில், இரண்டு ஆண்டுகளுக்கான இலக்கிற்கு இந்த ஆண்டே ஒப்புதல் அளித்து, 3,063.66 கிலோமீட்டர் நீளத்தில் 1,430 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கான பணிகள் 2503.80 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுடன், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்துவதற்காக திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5 ஆண்டுகளுக்கு மாறாக, 4 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- உலக வங்கி நிதியுதவியுடன் 'தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்' இரண்டாவது கட்டம் (TNRSP-II), **5,171** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சென்னை கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் **6,448** கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- **5** பகுதிகள் கொண்ட, **133.87** கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் சென்னை எல்லை சுற்றுச் சாலை திட்டம், **12,301** கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நெடுஞ்சாலைத் துறைக்காக, திருத்த மதிப்பீடுகளில் **16,316.47** கோடி ரூபாயும், **2021–22** ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **18,750.96** கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்துத் துறை**

- மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு **3,717.36** கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தங்களது செலவினங்களை மேற்கொள்வதற்காக, அரசு உத்தரவாதத்தின் அடிப்படையில் **3,739** கோடி ரூபாய் கடன்களைப் பெறுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் பேருந்து இயக்குவதற்கான கட்டணங்கள், மாணவர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணக் கட்டணம் மற்றும் ஏனைய மானியங்களாக **2,914.44** கோடி ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், **526.47** கோடி ரூபாய் குறுகியகாலக் கடனும், டீசல் மானியமாக **135.87** கோடி ரூபாயும் அரசு வழங்கியது.

- அடுத்த சில ஆண்டுகளில், **12,000** பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும். அவற்றில் **2,000** பேருந்துகள் மின்சாரப் பேருந்துகளாக இருக்கும். முதல் கட்டத்தில், ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், **1,580** கோடி ரூபாய் செலவில் **2,200** BS-VI பேருந்துகளும், **500** மின்சாரப் பேருந்துகளும் கொள்முதல் செய்யப்படும்.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான நிதியில், மத்திய அரசு தனது பங்கை வழங்கும் என்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் தனது வரவு–செலவுத் திட்ட உரையில் தெரிவித்துள்ளதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். இத்துடன் இத்திட்டத்திற்கான மொத்த நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

- 6,683 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 44 கிலோமீட்டர் நீளமுள்ள கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**எரிசக்தி**

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிறுவுதிறனான 16,167 மெகாவாட் உட்பட, மாநிலத்தின் தற்போதைய ஒட்டு மொத்த மின் நிறுவுதிறன் 32,149 மெகாவாட் ஆகும்

- தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றியதோடு அல்லாமல், எதிர்காலங்களிலும் இந்நிலை தொடருவதற்கான நடவடிக்கைகளை அரசு உறுதிசெய்துள்ளது

- 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மின் கட்டண மானியமாக 8,413.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மானியக் கட்டணங்களுக்காக 8,834.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் விதமாக உதய் திட்டத்தின் வழிமுறைகளின்படி, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,217.40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

- பள்ளிக் கல்விக்காக அதிகபட்சமான ஒதுக்கீடாக, 2020–21 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34,181.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இதுவரையில், கணிப்பொறி அறிவியல் பாடப்பிரிவானது 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு மட்டும் தனிப்பாடமாக கற்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கணிப்பொறி அறிவியல் அறிமுகப்படுத்தப்படும்.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**

- இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அம்மா மினி கிளினிக்குகளுக்காக 144 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 3,995 கோடி ரூபாய் மதிப்பில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்படுவதன் மூலம், 2021–22 ஆம் கல்வியாண்டில் கூடுதலாக 1,650 மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- 2020–21 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில், 15,863.37 கோடி ரூபாயிலிருந்து 2020–21 திருத்த மதிப்பீடுகளில் 18,458.27 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இந்த ஒதுக்கீட்டை உயர்த்தி, 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 19,420.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

- தற்போது, இந்த வாரியங்களில் 26,67,355 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 2011 ஆம் ஆண்டு முதல் இன்றைய நாள் வரையில், புலம் பெயர் தொழிலாளர்கள் உட்பட 84,32,473 பயனாளிகளுக்கு, நல நிதி உதவியாக 2,219.70 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து சென்னை மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்ட 1,20,309 பதிவு பெற்ற கட்டுமானப் பணியாளர்கள் அம்மா உணவகங்களில் இலவசமாக உணவை உட்கொள்கின்றனர்.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி**

- வேலை தேடுபவர்கள் மற்றும் தனியார் துறை வேலையளிப்பவர்கள் அணுகும் வகையில், தமிழ்நாடு தனியார் வேலைவாய்ப்பு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய நாள்வரையில், 1,12,194 வேலை தேடுபவர்களும் 3,360 வேலையளிப்பவர்களும் இந்த வலைதளத்தில் பதிவு செய்துள்ளனர். ஏற்கெனவே 18,147 வேலை தேடுபவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

**தொழில்துறை**

- 2020–21 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள், இந்தியாவில் முன்னணி முதலீட்டு இலக்காக தமிழ்நாடு திகழ்வதை மீண்டும் உறுதி செய்துள்ளன. 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலிருந்து இன்றைய நாள் வரையில், கையெழுத்திடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 81 திட்டங்கள் வணிக உற்பத்தியை தொடங்கி, 191 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆக மொத்தம், 89 சதவீதத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்**

- டாக்டர் சி.ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, கடன் வழங்கும் நிறுவனமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தை வலுப்படுத்துவதற்கும், அதன் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கும் கூடுதல் மூலதனமாக 1,000 கோடி ரூபாயை அரசு வழங்கும். இதற்காக, 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலன்**

- பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 2011–12 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் 12,50,705 பயனாளிகளுக்கு 1,791.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,099.08 கிலோ தங்கமும், 4,371.22 கோடி ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

- புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர் மதிய சத்துணவுத் திட்டம் ஊரடங்கு காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 43,246 மதிய சத்துணவுக் கூடங்கள் வாயிலாக 40.09 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,953.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2021–22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,634 கோடி ரூபாய் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

- 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் சிறப்புக் கூறுகள் திட்டத்திற்காக 13,967.58 கோடி ரூபாயும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக 1,276.24 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையான 4,109.53 கோடி ரூபாயில் 84.14 சதவீதம் அதாவது 3,457.56 கோடி ரூபாய் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உயர்கல்வி உதவித்தொகை திட்டத்திற்காக, 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,932.19 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த 7.40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி உதவித்தொகைகளைப் பெற்று வருகின்றனர்.

- சீர்மரபினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியம் ஆகியவை அந்தந்த சமூகத்தைச் சார்ந்த மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகின்றன. மேலும், வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சார்ந்த தனியர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சிகளின் சொத்துகளையும், நிலைக்கொடைகளின் சொத்துகளையும் பாதுகாப்பதற்கு, தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) சட்டம் 2018

**சிறுபான்மையினர் நலன்**

- 2020–21 ஆம் ஆண்டில் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக, 110 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

- மொழிவாரி சிறுபான்மையினர் நலனுக்காக, 9 கோடி ரூபாய், அரசின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீட்டுடன், தமிழ்நாட்டில் மொழிவாரி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிறுவப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

- மாற்றுத் திறனாளிகளுக்காக கண்டறியப்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு, தொடங்கியுள்ளது. 1,510 மாற்றுத் திறனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

- உடல் ஊனங்களை வருமுன் காப்பதற்கும், அதனைக் கையாளுவதற்கும் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை செயல்படுத்தவும், மாற்றுத் திறனாளிகளுக்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகளை உறுதி செய்வதற்காகவும், இந்த அரசால் 1,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'RIGHTS' என்ற சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் பொருளாதார விவகாரங்கள் துறையின் ஆய்வுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தற்போது உலக வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

**அரசு அலுவலர் நலன்**

- கோவிட்–19 பெருந்தொற்றை எதிர்கொள்வதில் முன்னணியில் இருந்து பொறுப்புடன் செயலாற்றிய அனைத்து அரசு ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.
- இந்த ஆண்டில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, மிகப்பெரிய பங்களிப்பு அரசு ஊழியர்களால், ஒரு குழுவாக வழங்கப்பட்டது.

**பாகம் – ஆ**

**வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

- 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், ஒட்டுமொத்தமாக மாநில அரசின் சொந்த வரி வருவாய் 1,09,968.97 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகையானது, 2020–21 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாயாக எதிர்பார்க்கப்பட்ட 1,33,530.30 கோடி ரூபாயைவிட 17.64 சதவீதம் குறைவானது.
- மத்திய அரசின் 2020–21 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 32,849.34 கோடி ரூபாயாக குறிப்பிடப்பட்ட தமிழ்நாட்டிற்கான மத்திய வரியின் பங்கு 2020–21 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 23,039.46 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் வருவாயில் மாநிலங்கள் தங்களுக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரி வீதங்களுடன் இணைத்திட மத்திய அரசை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

- **2020–21** ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மொத்த வருவாய் வரவினம் **1,80,700.62** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து **17.63** சதவீதம் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.

- கோவிட்–**19** பெருந்தொற்றின் காரணமாக, சுகாதாரம் மற்றும் நிவாரணம் தொடர்பான பணிகளுக்காக **12,917.85** கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்த செலவினங்கள் குறைக்கப்படாமல் இருப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இந்தியாவில், **2020–21** ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் தடைபடாமல் வழங்கிய சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும். இதன் விளைவாக, **2020–21** ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினம் **2,46,694.69** கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது.

- ஒட்டுமொத்த வருவாய்ப் பற்றாக்குறை **65,994.06** கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை, **2020–21** ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட **21,617.61** கோடி ரூபாயைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும்.

- கோவிட்–**19** பெருந்தொற்றின்போது, திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டிருந்தாலும், **2020–21** ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவினம் **37,734.42** கோடி ரூபாயாக அதிகரிக்கும் என கணிக்கப்படுகிறது. இது **2019–20** ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மூலதனச் செலவினமான **25,631.58** கோடி ரூபாயை விட **12,102.84** கோடி ரூபாய் அதிகமாகும்.

- கோவிட்–19 பெருந்தொற்றுநோயால் வருவாய் கடுமையாகக் குறைந்துள்ளது. ஆனால், மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, செலவினங்கள் அதிகரிக்கப்பட்டன. எனவே, அரசு கடன்கள் பெறுவதைத் தவிர்க்க இயலாது. இதனால், நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கும்.

- மொத்தத்தில், 2020–21 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.99 சதவீதமாக, அதாவது 96,889.97 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 15வது நிதிக்குழு பரிந்துரைக்கும், திருத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்திற்கும் ஏற்ப உள்ளது.

- 2020–21 ஆம் ஆண்டில் கணிசமாகக் குறைந்திருந்த வருவாய் வரவினங்கள் மீண்டெழும் என்று 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்படுகிறது.

- 2021–22 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 1,35,641.78 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- 15வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வு 2021–22 ஆம் ஆண்டில், சிறிய அளவில் குறைந்துள்ளது. எனவே, மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 27,148.31 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் வரவினம் 2,18,991.96 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டித்தொகை மற்றும் திட்டம் சார்ந்த செலவினங்கள் அனைத்திற்கும் 2021–22 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினங்கள்

உள்ளபடியான நிலவர அடிப்படையில் **2,60,409.26** கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், **2021–22** ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை **41,417.30** கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ இதனால், மூலதனச் செலவினம் **14.41** சதவீதமாக உயர்ந்து **43,170.61** கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ நடப்பு நிதியாண்டில் அதிகரித்துள்ள நிதிப் பற்றாக்குறையைத் தவிர்க்க இயலாது. பொருளாதாரத்தில் எந்த ஒரு பாதகமான தாக்கமும் ஏற்படாமல் இருப்பதற்காக, இந்தப் பற்றாக்குறையை படிப்படியாகக் குறைக்க வேண்டும். **2021–22** ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கான நிதிப் பற்றாக்குறை அளவை உயர்த்தி, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **4** சதவீதம் வரை அனுமதிக்க வேண்டும் என்று **15**வதுநிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, **2021–22** ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **3.94** சதவீதம், அதாவது **84,202.39** கோடி ரூபாயாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

❖ **2021** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31**–ஆம் நாள் அன்றைய நிலையில், ஒட்டுமொத்தக் கடன் **4,85,502.54** கோடி ரூபாயாகவும், **2022** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31**–ஆம் நாள் அன்றைய நிலையில் **5,70,189.29** கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினங்களின் நிலையை தக்கவைக்க **2020–21** மற்றும் **2021–22** ஆகிய ஆண்டுகளில் அதிக அளவில் கடன் தேவைப்படும் என்பதை அறிந்து, **15**வது நிதிக்குழு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதத்தை மாற்றியமைத்தது.

❖ **2021** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31** அன்றைய நிலையில், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் **24.98** சதவீதமாகவும், **2022** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31** அன்றைய நிலையில் **26.69** சதவீதமாகவும் இருக்கும். அவை, **15**வது நிதிக்குழுவின் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டவையே ஆகும்.